ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2514 - 2026 නොවැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2026.11.06

2514 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	3816	பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	3916

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3895 - B 82845 (2026/10)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்த்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு எதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10.ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடித்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு குறியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் எதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) எதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், எனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

பதவிகள் - வெற்றிடம்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

சமூக சேவைகள் திணைக்களம்

வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் 15 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல " என்ற முகவரிக்கு 2026.11.30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அஞ்சல் மூலம் அல்லது நேரில்கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் உத்தியோகத்தர்கள் பின்வரும் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. பதவி வெற்றிடம் நிலவும் நிறுவனங்கள் - 15

தொடர் இலக்கம்	*வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவி*	*வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்*	*பதவிகளின் எண்ணிக்கை*
01	குழாய் பழுதுபார்ப்பவர் (Plumber)	அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	03
		கெட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
		சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
02	செயற்கை அலங்கார ஆபரணக் கலைஞர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	03
		மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
		களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
03	தொழிற்சாலை தையல் எந்திர இயக்குநர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	02
		அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
04	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்	மாதம்பே வாழ்க்கைத தொழிற் பயிற்சி நிறுவனம்	02
		கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
05	விற்பனை உதவியாளர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01

தொடர் இலக்கம்	*வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவி*	*வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்*	*பதவிகளின் எண்ணிக்கை*
06	ரெய்லர்	கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
07	கடதாசி மீள்சுழற்சி தொழில்நுட்ப வல்லுனர்	மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
08	அழகுக் கலை நிபுணர்	வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
09	வெதுப்பக வல்லுனர் (பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி)	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
மொத்தப் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை			15

1.1 **திறந்த ஆட்சேர்ப்பு**

1.1.1 **வயது வரையறை** :

விண்ணப்பங்களினை ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.2 **கல்வித் தகைமைகள்** :

(அ) வாழ்க்கைத் தொழிற் கல்விப் போதனாசியர் (உணவுத் தொழில்நுட்பம்/வெதுப்பக மற்றும் பேக்கரி தயாரிப்பு) பதவிகள் தொடர்பில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் (சீ) ஒரே அமர்வில் (06) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

(இ) வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசியர் (உணவுத் தொழில்நுட்பம்/வெதுப்பக மற்றும் பேஸ்ட்ரி தயாரிப்பு) பதவிகளினைத் தவிர்த்து, பிற பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்.

i. சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் கல்விப் பொது தராதர (சா.தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

ii. கல்வி பொது தராதர (உ./தர) பரீட்சையில் வேண்டிய பாடவிதானமொன்றில் சகல பாடங்களிலும் (சாதாரணப் பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்று மூன்றாம் நிலைக் கல்வியினைத் தொடர்வதற்குத் தேவையான அடைவு மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

1.1.3 **தொழிற் கல்வித் தகைமைகள் :-**

தொடர்புடைய தொழில் துறையில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் அல்லது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அவற்றுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய தொழிற் கல்வி தொடர்பில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அவற்றுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய தொழிற் கல்வி தொடர்பில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழிற் திறன் (NVQ) மற்றும் (05) ஆவது மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட உரிய தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பாடநெறியொன்றினை வெற்றிகரமாகத் தொடர்ந்து சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

1.1.4. **அனுபவம்** :

தொடர்பற்றது.

1.1.5. **உடற் தகுதிகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடலாரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.1.6 **பிற** :

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.1.7 **ஆட்சேர்ப்பு முறைமை :**

எழுத்து மூல மற்றும் வாழ்க்கை முறைப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.1.7.1 **எழுத்து மூலப் பரீட்சை** :

விடயங்கள்	*நேரம்*	*ஆகக்கூடிய மதிப்பெண்கள்*	*தேர்ச்சி மதிப்பெண்கள்*
நுண்ணறிவுப் பரீட்சை	நேரம் 01 மணி	100	40
கிரகித்தல்	நேரம் 01 மணி	100	40

1.1.7.2 **தொழில்முறைப் பரீட்சை** :

வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்களின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல்.

விடயங்கள்	*ஆகக்கூடிய மதிப்பெண்கள்*	*தேர்ச்சி மதிப்பெண்கள்*
01. பாடத்திற்கு முன்னதாக வகுப்பறையினைத் தயார் செய்தல்.	25	40%
02. பாட அறிமுகம்	25	
03. போதனாசிரியரின் விடயம் தொடர்பிலான அறிவு	25	
04. பயிலுனர்களின் கவனத்தினை ஈர்ப்பதற்குப் பயன் படுத்தப்படும் நுட்பங்களின் செயற்றிறன்.	25	
மொத்தம்	100%	

1.1.8 **பொது நேர்முகப் பரீட்சை :**

பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிப்பதற்காகச் சான்றிதழ் களினைப் பரீட்சித்தல். (மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.)

1.1.9 **சம்பள அளவுத் திட்டம் :**

பொ.நி.சு. 10/2025 இன் பிரகாரம் MT-01 -2025

சம்பள அளவு ரூ. 50,090.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 ரூபா 84,420.00 ஆகும்.

(இச் சம்பள அளவு 2027.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.)

1.1.10 **குறிப்பு :**

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து இரு மடங்களினர் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அத்தருணத்தில் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சை இரண்டிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.11 **சேவை நிபந்தனைகள் :**

இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அவற்றுடன் தொடர்பிலான சுற்றுநிரூபங்களின் பிரகாரம், மூன்று வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.1.12 **குறிப்பு**

மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாகச் சேவையாற்றுதல் வேண்டும்.

தர்சனீ கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 ஆவது மாடி,
II ஆவது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2026.10.26

..... பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப் படிவம்

மொழிமூலம் [ ]

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : .....
2. முதலெழுத்துக்களினால் அறியப்படும் பெயர்கள் : .....
   .....
3. முகவரி: .....
4. தொலைபேசி இலக்கம் : .....
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : .....
6. பிறந்த திகதி : .....

7. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று வயது : வருடங்கள் : ..... மாதங்கள் : ..... நாட்கள் : .....

8. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது தொடர்பானது : .....

9. ஆண்/பெண் பாகுபாடு : .....

10. **கல்வித் தகைமைகள்** :

I. க.பொ.த. (சாதாரண தரம்)

ஆண்டு :- ..... பரீட்சைச் சுட்டெண்:- .....

விடயங்கள்	*தரம்*	*விடயங்கள்*	*தரம்*
கணிதம்			
சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்			

II க.பொ.த. (உயர் தரம்)

ஆண்டு : ..... சுட்டெண் :.....

விடயங்கள்	*தரம்*	*விடயங்கள்*	*தரம்*

11. **தொழில் முறை மற்றும் பிற தகைமைகள் :**

பாடநெறியின் பெயர்	*நிறுவனம்*	*பாடநெறியின் காலஎல்லை*

12. **அனுபவம்**

.....
.....
.....

இவ் விண்ணப்பத்தில் என் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் சான்று பகர்கின்றேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நிதி அமைச்சு

விலைமதிப்பீட்டுத் திணைக்களம்

சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியின் III ஆவது தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2026

நிதி அமைச்சின், விலைமதிப்பீட்டுத் திணைக்கள நிறைவேற்று அலுவலர் வகுதியின் III ஆவது தரத்தில் சட்ட அலுவலர் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவித்தலில் தரப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடையே, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் தகுதிகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைச் சபையால் நடாத்தப்படும் தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்கு நியமிக்கப்படுவார். அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 06 இன் கீழ் தரப்பட்ட) புள்ளி வழங்கும் திட்டத்தின் பிரகாரம் தகுதியை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி 2026.12.04 ஆகும்.

2. **தேவையான தகைமைகள்:**

(i) **கல்வி/ தொழில் தகைமைகள் :**

இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் / உறுதி எடுத்திருத்தல்.

(ii) **அனுபவம் :**

உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் / உறுதி எடுத்த பிள்னர், மூன்று (03) வருடகாலத்துக்குக் குறையாது சட்டத்தரணியாகச் செயலாக்கமுள்ள தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல். (செயலாக்கமுள்ள தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்னளிக் கப்படும் ஆவணங்களில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலம், உறுதிப்படுத்துபவரது உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் உறுதிப்படுத்தும் திகதி ஆகியன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்).

அல்லது

இலங்கை உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் / உறுதி எடுத்த பின்னர், அரச நிறுவனமொன்றில் சட்டம் தொடர்பான பதவியொன்றில்* மூன்று (03) வருடகாலத்துக்குக் குறையாது பின்வரும் செயற்பாடுகளில் உரிய அனுபவத்தைப் பெற்றிருத்தல்:

(செயலாளரால்/திணைக்கள/நிறுவனத் தலைவரால் முன்னளிக்கப்படும் ஆவணத்தில் இது உறுதிப்படுத் தப்பட வேண்டும்).

I. வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கை களும், சட்டமா அதிபர் திணைக்களத்துடனான இணைப்பு நடவடிக்கைகளும்,

II. ஒப்பந்தங்கள் மற்றும் தொடர்புடைய சட்டச் செயற்பாடுகள்,

III. உரிய சட்டங்கள் தொடர்பான சட்டச் செயற்பாடுகள்,

IV. சட்டங்கள், சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்டரீதியான ஆவணங்களின் தயாரிப்புச் செயற்பாடுகள்,

V. பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களில் நடாத்தப்படும் சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது பரிசோதனை நடவடிக்கைகள்

குறிப்பு:

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின், விண்ணப்பதாரியே சான்றுப் படுத்திய பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். சேவைக்காலம் ஆரம்பித்த முடிவுற்ற திகதிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப் படாத விண்ணப்பம், அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட முடியும்.

*சட்டம் தொடர்பான பதவி எனப்படுவது சட்டத்திலான பட்டத்தை அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி என்றவாறு சத்தியப்பிரமாணம்/உறுதி எடுத்திருத்தலை ஆட்சேர்ப்பதற்குரிய அடிப்படைத் தகைமை யாகக் கொண்ட பதவியாகும்.

(iii) **உடல், உளத் தகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப் பாகத்திலும் கடமையாற்றும் வகையில், தேவையான உடல் தகைமையையும், உளத் தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **வேறு தகைமைகள் :**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
* விண்ணப்பம் கோருவதற்கான இறுதித் தினத்தன்று பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகளை எல்லா வகையிலும் முழுமையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துக்கு உரியதுமாகும். விண்ணப்பதாரிக்குரிய ஓய்வூதிய முறை பற்றி, அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரி அமைதல் வேண்டும். விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்குரிய பங்களிப்பை வழங்குதல் வேண்டும். அதற்குரிய பங்களிப்பு, அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் பணிக்கப்படுவதற்கு அமைவாக வழங்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருடங்களுக்குத் தகுதிகூர் காலத்துக்குட்பட்டதாகும். பதவியில் ஆட்சேர்க்கப்பட்டு 03 வருட காலத்தினுள், ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 18/2020 ஆம் இலக்க, 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி, மற்றைய அரசகரும மொழியில்/ மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்நியமனமானது, அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகளிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையிலும், அரசாங்க நிதிப் பிரமாணங்களிலும், திணைக்களத்தின் மற்றைய கட்டளைகளிலும் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்படும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், நியமனம் பெறுவதற்கான தகைமைகளின் மொழி மூலம் எனப்படுவது, விண்ணப்பதாரியால் விண் ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழியாக இருக்கும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலிருத்தல் வேண்டும் என்பதுடன், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

10/2025 ஆம் இலக்க 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 82,150.00 -10 x 2,400 - 8 × 2,940 - 17 × 3,900 - ரூபா 195,970.00 (SL-1-2025) ஆகும். மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி அதன் பின்னிணைப்பு III இன் பிரகாரமே சம்பளம் வழங்கப்படும்.

6. **தகைமையைப் பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையில் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.**

தொடர் இல.	*விடயம்*	*புள்ளிகள்*	*ஆகக்கூடிய புள்ளிகள்*
01	**மேலதிக கல்வித் தகைமைகள் :**		**25**
	(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்புப் பட்டம்.	25	
	(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்ட டிப்ளோமா.	20	

தொடர் இல.	*விடயம்*	*புள்ளிகள்*	*ஆகக்கூடிய புள்ளிகள்*
	(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட		
	* முதலாம் வகுப்புச் சிறப்புத் தகுதியுடனான சட்ட இளநிலைப் பட்டம்	15	
	* இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு சிறப்புத் தகுதியுடனான சட்ட இளநிலைப்பட்டம்	10	
	* இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவு சிறப்புத் தகுதியுடனான சட்ட இளநிலைப்பட்டம்	07	
	* சாதாரண சிறப்புத் தகுதியுடனான சட்ட இளநிலைப்பட்டம்	05	
	(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதி வருடத்தில் முதலாம் தரச் சித்தி	10	
	சட்டக் கல்லூரியின் இறுதி வருடத்தில் இரண்டாம் தரச் சித்தி	05	
	குறிப்பு I : சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தரத்தில் சித்தியடைந்திருந்திருந்தால் மாத்திரமே மேற்படி 05 புள்ளிகளும் வழங்கப்படும்.		
	குறிப்பு II : ஆகக்கூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.		
02	**மேலதிக அனுபவம் :** வழக்குகளுக்குரிய ஆவணங்களைத் தயாரித்தலும், திறந்த நீதிமன்றில் சான்றுகளைச் சமர்ப்பித்தலும்		**35**

	வழக்குத் தொடருதல் (வழக்கொன்றுக்காக)	நீதிமன்றின் முன்னிலையில் தோற்றி சான்றுகளைச் சமர்ப்பித்தலுக்கான புள்ளிகள் (வழக்கொன்றுக்காக)
உயர் நீதிமன்றம்	2	5
மேன்முறையீட்டு நீதிமன்றம்	2	4
மேல் நீதிமன்றம்	2	3
மாவட்ட நீதிமன்றம்	4	5
நீதித்துறை	2	3

குறிப்பு :

மேற்படி தகைமையை உறுதிப்படுத்துவதற்காக உரிய வழக்குத் தீர்ப்புகளின் பிரதிகளின் அல்லது இறுதியாக வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினத்திற்குரிய வழக்கு அறிக்கைகளின் சான்றுப் படுத்திய பிரதிகள் நேர்முகப் பரீட்சைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்.

தொடர் இல.	*விடயம்*	*புள்ளிகள்*	*ஆகக்கூடிய புள்ளிகள்*
03	**மொழி இயலுமை** (அ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழியை முதன்மைப் பாடமாகக் கொண்ட பட்டம். (ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்ட மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitions) ஆங்கில மொழியில் வெளிக்காட்டப்பட்ட திறமை	15 12	**15**
	தனியாளாக i. முதலிட/சிறப்புத் திறமை - 12 ii. இரண்டாமிடம் - 10 iii. மூன்றாமிடம்/மற்றைய திறமை - 08 குழுவாக i. முதலிட/சிறப்புத் திறமை - 10 ii. இரண்டாமிடம் - 08 iii. மூன்றாமிடம்/மற்றைய திறமை - 06 (இ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட, ஆங்கில மொழிக்கான டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றில் ஆங்கில மொழிக் காகப் பெறப்பட்ட SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத் திலான டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில்/ அதன் இணை நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 1500 மணித்தி யாலங்களுக்குக் கற்ற பின்னர் பெறப்பட்ட ஆங்கில மொழிக்கான டிப்ளோமா. (ஈ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் (தேசிய அல்லது இலண்டன்) ஆங்கில மொழிக்காக அதிசிறப்புச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது IELTS இல் மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேல், அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல். (உ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிக்காகப் பெறப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றின் ஆங்கில மொழிக்கான SLQF 2 மட்டச் சான்றிதழ். **குறிப்பு:** ஆகக்கூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.	10 08 05	
04	**தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சட்டம் பற்றிய அறிவு** (அ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற தகவல் தொழில்நுட்பத்தை அல்லது கணினி விஞ்ஞானத்தை முக்கிய பாடமாகக் கொண்ட இளநிலைப் பட்டம். (ஆ) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில் நிறுவனமொன்றில் பெறப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய டிப்ளோமா.	10 08	**10**

தொடர் இல.	*விடயம்*	*புள்ளிகள்*	*ஆகக்கூடிய புள்ளிகள்*
	(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்ற, கணினி விஞ்ஞான அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கணினி விஞ்ஞான அல்லது தகவல் தொழில்நுட்பம் பற்றிய NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான டிப்ளோமா,	05	
	(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியில் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில் நிறுவனமொன்றில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய கல்வி /பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றிப் பெறப்பட்ட சான்றிதழ் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் இரு சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்) **குறிப்பு**: ஆகக்கூடிய தகைமைக்காக மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.	04	
	நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமை பதவியின் வகிபாகத்தை நிறைவேற்றுவதற்கான விண்ணப்பதாரியின் ○ பலங்கள் (Strength questions) (02 புள்ளிகள்), ○ சமயோசிதமாகத் தீர்மானமெடுக்கும் இயலுமை (Situational questions) (03 புள்ளிகள்), மற்றும், ○ திறன்கள் (Competency questions) (10 புள்ளிகள்) மதிப்பிடுவதை நோக்காகக்கொண்டுள்ள கேள்விகளுக்கு வழங்கப்படும் விடைகளின்படி புள்ளிகள் வழங்கப்படும்.		15
	மொத்தம்		100

7. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

எல்லா விதங்களிலும் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே, தகுதிகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சைக்கு, எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளுடன் விண்ணப்பதாரியாலேயே உரிய முறையில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆளடையான அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

8. **விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விதம்**

(i) விண்ணப்பம் ..... ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக, "அரசாங்க தலைமை விலைமதிப் பீட்டாளர், அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களம். இல. 748, மருதானை வீதி, கொழும்பு 10" என்ற முகவரிக்கு. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(ii) மாதிரி விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரி தமது விண்ணப்பத்தை A4 அளவிலான கடதாசியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அதன் முதலாவது பக்கத்தில் 01 தொடக்கம் 08 வரையிலான விடயங்களும், இரண்டாவது பக்கத்தில் 09 தொடக்கம் 11 வரையிலான விடயங்களும், மூன்றாவது பக்கத்தில் 12 தொடக்கம் 13 வரையிலான விடயங்களும் உள்ளடங்கத்தக்கவாறு தயாரிக்கப்பட்டு, தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் "நிதி அமைச்சின், விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் சட்ட அலுவலர் தாம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2026" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்க பாடசாலை அதிபரொருவரால்/ ஓய்வுபெற்ற அலுவலரொருவரால், பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலரால், சமாதான நீதவானொருவரால், சத்தியப் பிரமாண ஆணையாளரொருவரால், சட்டத்தரணியொருவரால், பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், முப்படைகளில் அதிகாரமுள்ள அதிகாரியொருவரால், அரசாங்க/மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரப் பதவிநிலை அலுவலரொருவரால் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியால் அல்லது தலைமை பௌத்த குருவால் அல்லது மற்றைய மதங்களின் வழிபாட்டிடங்களுக்குப் பொறுப்பாயுள்ள முக்கிய மதகுருவால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தைத் தாம் கடமையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக முன்னளித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பமானது, அறிவித்தல் தரப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பாக எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பதாரரால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் தரப்படும் ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என, ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல், ஆட்சேர்ப்பின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், உரிய செயற்பாடுகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்பதல், அல்லது நிரப்பாமல் விடுதல் அல்லது வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளிலான உரைகளிடையே ஏதேனும் வேறுபாடு அல்லது முரண்பாடு காணப்படுமிடத்து, சிங்கள மொழியிலான உரையே கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

12. இந்த அறிவித்தலில் கூறப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில், அல்லது இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஏதேனும் சிக்கலான நிலைமை தோன்றுமிடத்து, அது பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாக இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி.

செயலாளர்,
நிதி அமைச்சு.

2026.

மாதிரி விண்ணப்பம்

நிதி அமைச்சின் விலைமதிப்பீட்டுத் திணைக்களம்

சட்ட அலுவலர் (நிறைவேற்று அலுவலர் வகுதியின் III ஆவது தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2026

(அலுவலகத் தேவைக்காக மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழிமூலத்துக்குரிய இலக்கத்தை இச்சதுரத்தினுள் எழுதுக)

சிங்களம் - 2/ தமிழ் - 3/ ஆங்கிலம் - 4

குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்ற இயலாது.

1.0 1.1 முழுப் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : .....

(சிங்களத்தில்/ தமிழில்) : .....

1.2. முழுப் பெயர் : .....

(ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) : .....

(சிங்களத்தில்/ தமிழில்) உ-ம் : எம். சீ. பீ. எஸ். கே. குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : .....

(ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்) உ-ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

2.0 2.1 நிரந்தர முகவரி : .....

(சிங்களத்தில்/ தமிழில்)

2.2. நிரந்தர முகவரி : .....

(ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்)

3.0 3.1 பால் : ஆண் 0 ☐ பெண் 1 ☐ (இலக்கத்தைச் சதுரத்தினுள் எழுதுக)

3.2 விவாக நிலைமை : விவாகமானவர் - 1 ☐ (உரிய இலக்கத்தைச் சதுரத்தினுள் எழுதுக)

விவாகமாகாதவர்-2

3.3 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2025..... ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1 தொலைபேசி இல. நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

நடமாடும் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 கல்வித் தகைமைகள் :

5.1 பட்டம்	நிறுவனம்	திகதி
.....	.....	.....
.....	.....	.....

6.0 உயர் நீதிமன்றில் சட்டத்தரணியொருவராகப் பிரமாணம் எடுத்த திகதி : .....

6.1 உயர் நீதிமன்றில் பிரமாணம் எடுத்த பின்னர் 03 வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்த திகதி :.....

6.2 அரசாங்க நிறுவனமொன்றில் சட்டம் சம்பந்தப்பட்ட பதவியில் 03 வருட அனுபவத்தைப் பூர்த்தி செய்த திகதி: .....
.....

*அடிப்படைத் தகைமையை நிரூபிக்கும் சான்றிதழ்/ஆவணம், விண்ணப்பதாரியால் உண்மையானதென உறுதிப் படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

7.0 விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 06 ஆம் பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தகைமையையும் பற்றிய விபரங்கள்:

7.1 மேலதிக கல்வித் தகைமைகள் : .....
.....

7.2 மேலதிக தொழிற் தகைமைகள் : .....
.....

7.3 தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு : .....
.....

7.4 மொழி அறிவு : .....
.....

* மேலதிக தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படத் தேவையில்லை என்பதுடன், அவை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படுவதற்காக ஆயத்தமாக வைத்திருத்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

8.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா? (ஆம் எனின், விபரம் தருக)

9.0. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் ஆகும் எனவும், எல்லாப் பகுதிகளும் சரியாக நிரப்பப்பட்டுள்ளன எனவும், என்னால் மேற்கொள்ளப்படும். இப் பிரகடனம் உண்மையற்றதெனக் காணப்பட்டால், நியமனத்திற்கு முன்னர் அதற்குப் பொருத்தமற்றவராவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன் எனவும், தொடர்புடைய எல்லாச் சட்டதிட்டங்களுக்கும் நான் உடன்படுகிறேன் எனவும் இத்தால் உறுதி கூறுகிறேன்.

....
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி .....
..... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ..... ஆம் திகதியன்று தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

.....
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரது கையொப்பம்
முழுப் பெயர் :.....
பதவி :.....
திகதி :.....
(உத்தியோகபூர்வ முத்திரையை இட்டு உறுதிப்படுத்துக)

11.0. திணைக்களத் தலைவரது சிபாரிசு: (அரசாங்க சேவையில் உள்ள அலுவலருக்கு மாத்திரம்)

மேலே விபரங்கள் தரப்பட்டுள்ள திரு. திருமதி /செல்வி இந்த நிறுவனத்தில் கடமையாற்றுபவர் என்பதையும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், அவரது வேலையும் வருகையும் திருப்திகரமானவை எனவும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை எனவும் இந்தப் பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....
திணைக்கள/நிறுவனத் தலைவரது கையொப்பம்

பெயர் :.....
பதவிப் பெயர் :.....
முகவரி :.....
திகதி :.....
(உத்தியோகபூர்வ முத்திரையை இடுக)

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்திற்கான விரிவுரையாளர் பதவிக்கு (கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01, தரம் II) திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்தின் கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01, தரம் II இன் கீழ் விரிவுரையாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக, இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வெற்றிடங்களின் எண்ணிக்கை - ஒன்று (01)

2. தேவையான தகைமைகள்:

(i) **கல்விசார் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்; அல்லது,

(ஆ) இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டம் ஒன்றின் மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்; அல்லது,

(இ) 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்.

(ii) **அனுபவம் :**

விரிவுரையாளர் / பயிற்றுவிப்பாளர் அல்லது செயல்விளக்குநர் (Demonstrator) போன்ற பதவிகளில் குறித்த பதவிக்குப் பொருத்தமான ஒரு (01) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

குறிப்பு:

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் சுய உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களில் உரிய காலப்பகுதிகள் குறிப்பிடப்படாதிருப்பின், குறித்த காலப்பகுதிகளை உறுதிப்படுத்தும் எழுத்துமூலமான உறுதிப்படுத்தலை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். உரிய காலப்பகுதி குறிப்பிடப்படாத மற்றும் அக்காலப்பகுதி உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்காகக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(iii) **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்குக் குறையாத வர்களாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 62,230.00 – 10 x 1,190 – 11 x 1,360 – 15 x 1,670 – ரூ. 114,140 .00 (MN 06 – 2025) ஆகும்.

(v) **உடல் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) **ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக, விண்ணப்பதாரர் வசிக்கும் பிரிவுக்குரிய கிராம அலுவலரிடமிருந்து கடந்த ஆறு (06) மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட DS 04 சான்றிதழ் மற்றும் மற்றுமொரு நன்னடத்தைச் சான்றிதழை என்பனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.)

(இ) குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பதவியில் நியமிக்கப்படுவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றில் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதற்குரிய பங்களிப்புத் தொகைகளை நீங்கள் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள், ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பரிந்துரைக்கப்பட்ட ஏனைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்கத்தின் ஏனைய ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றுக்கும், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை கோள்மண்டலத்தின் கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் பிரிவு – சேவை வகுதி 01 இன் விரிவுரையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், அவை தொடர்பாக அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கும் நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

(v) விண்ணப்பத்தில்குறிப்பிடப்பட்டுள்ளவிண்ணப்பமொழிமூலத்தைப்பின்னர்மாற்றுவதற்குஅனுமதிக்கப்படமாட்டாது. நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதியுடைய மொழி மூலம், விண்ணப்பப் படிவத்தில் உங்களால் குறிப்பிடப்பட்ட மொழி மூலமாகவே இருக்கும்.

4. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுள், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளரினால் அதிகாரமளிக்கப்படும் நிறுவனமொன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர் குறித்த பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

(அ) **எழுத்துப் பரீட்சை**:

பாடங்கள்	*கால அளவு*	*அதி கூடிய புள்ளிகள்*	*சித்தி பெறுவதற்கான புள்ளிகள்*
நுண்ணறிவுப் பரீட்சை (IQ Test)	01 மணித்தியாலம்	100%	40%
பொதுக் கேள்வித்தாள் பரீட்சை	01 மணித்தியாலம்	100%	40%

(ஆ) **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

வினாத்தாளின் பெயர்	*பாடத்திட்டம்*
நுண்ணறிவுப் பரீட்சை	விண்ணப்பதாரரின் பொதுவான நுண்ணறிவு, தர்க்கரீதியாகச் சிந்திக்கும் திறன், கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன், கணிதத் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள்.

வினாத்தாளின் பெயர்	*பாடத்திட்டம்*
பொதுப் பரீட்சை	இணைந்த கணிதம் / தூய கணிதம் மற்றும் பிரயோகக் கணிதம், பௌதிகவியல், கணினி விஞ்ஞானம், வானியல், விண்வெளி விஞ்ஞானம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிவை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்ட வினாத்தாள்.

(இ) **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்	*அதி கூடிய புள்ளிகள்*	*அதி குறைந்த புள்ளிகள்*
1. விரிவுரைகளை நிகழ்த்தும் திறன் (presentation ஒன்றினை செய்யக்கூடிய திறன்) 2. வானியல் தொடர்பான அறிவு 3. தொலைநோக்கிகள் தொடர்பான அறிவு 4. நேர்முகப் பரீட்சைக் குழுவின் விருப்பத்திற்கேற்ப திறன்கள், தலைமைத்துவம், மனப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்கள்	60 25 10 05	பொருந்தாது

5. **விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல்:**

அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன், விண்ணப்பதாரரினால் உண்மைப் பிரதிகள் எனச் சுயமாகச் சான்றளிக்கப்பட்ட ஒளிப்படப் பிரதிகளின் இரண்டு (02) தொகுதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

6. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களாவன, 2026.11.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு, 3 ஆம் மாடி, செத்சிறிபாய முதலாம் கட்டம், பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து, முதல் பக்கம் 01 முதல் 05 வரையிலும், இரண்டாம் பக்கம் 06 முதல் 09 வரையிலும் அமையும் வகையில் ஒழுங்குபடுத்தி, தமது கையெழுத்தில் முழுமையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் மேல் இடது மூலையில் "இலங்கை கோள்மண்டலத்தின் விரிவுரையாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்திய ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது ரூபா 62,230.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை, தாம் பணியாற்றும் திணைக்களத்தின் ,திணைக்களத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவமைப்பிற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **தவறான தகவல்களை வழங்குதல்:**

நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் தவறானது அல்லது பொய்யானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படும். அவ்வாறான தவறான அல்லது பொய்யான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. குறித்த பதவி வெற்றிடத்தை நிரப்புவதா அல்லது நிரப்பாமல் விடுவதா என்பது தொடர்பான உரிமை விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளருக்கு உரியது.

9. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படுமாயின், சிங்கள மொழிப் பிரதியே மேலோங்கியதாகக் கருதப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக அல்லது இவ்வாட்சேர்ப்பு நடைமுறையில் ஏதேனும் சிக்கலான நிலைமை ஏற்படுமாயின், அது தொடர்பாக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

செயலாளர்.

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு,
2026, நவெம்பர் 09.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கை கோள்மண்டலத்தின் விரிவுரையாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)
(விண்ணப்பிக்கும் மொழி ஊடகத்திற்குரிய இலக்கத்தை பெட்டிக்குள் எழுதவும்.)

(சிங்களம் - 2 / தமிழ் - 3 / ஆங்கிலம் - 4)

குறிப்பு : விண்ணப்பத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மொழி ஊடகத்தைப் பின்னர் மாற்ற முடியாது.

1.0 1.1 முழுப்பெயர் (திரு ./திருமதி/செல்வி) : .....
(சிங்களத்தில் /தமிழில்) : .....

1.2 முழுப்பெயர் :.....
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.....

1.3 முதலெழுத்துகளுடன் கூடிய பெயர் (திரு ./திருமதி /செல்வி) :.....
(சிங்களம் /தமிழில்) உ+ம் . එම්.ජී.බී.එස්.කේ. ගුණවර්ධන.

எம் .ஜி.பி .எஸ்.கே.குணவர்த்தன

1.4 முதலெழுத்துகளுடன் கூடிய பெயர் .....
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்):

2.0 2.1 நிரந்தர வதிவிட முகவரி :.....
(சிங்களத்தில் /தமிழில்)

2.2 நிரந்தர வதிவிட முகவரி :.....
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3.0 3.1 பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐

3.2 விவாக நிலை : (திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2) ☐

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2026 .11.30 இல் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 தொலைபேசி இலக்கம்

நிலையான வதிவிலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 கல்வி சார் தகைமைகள் :

5.1 பட்டம்	வழங்கிய நிறுவனம்	வழங்கப்பட்ட திகதி
.....	.....	.....
.....	.....	.....

6.0 அனுபவம் : .....
.....
.....

* அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் விண்ணப்பதாரரால் சுயமாகச் சான்றொப்ப மிடப்பட்டு, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.0 விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அனைத்து பிரிவுகளும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றேன். இவ்வறிவிப்பு பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்னர் அது கண்டறியப்படும் பட்சத்தில் நியமனத்திற்கான தகுதியை இழப்பேன் என்றும், நியமனத்திற்குப் பின்னர் அது கண்டறியப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும் நான் அறிந்துள்ளேன். மேலும், பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் கடைப்பிடிப்பேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

திகதி: ....

விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி ..... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளேன் என்றும், அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்றும் இதன்மூலம் சான்றளிக்கின்றேன்.

.....
சான்றளிக்கும் அலுவலரின் கையொப்பம்
முழுப் பெயர்:
பதவி:
திகதி:
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

9.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை (அரச துறையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

மேலே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ..... அவர்கள் இந்நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும், அவரது பணியும் வருகையும் திருப்திகரமானவை என்றும், அவருக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லை என்றும் இதன்மூலம் சான்றளிக்கின்றேன். மேலும், இப்பதவிக்கு அவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பெயர்:
பதவி:
முகவரி:
திகதி:
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இலங்கை மதுவரித் திணைக்களம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு - செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கை மதுவரித் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள ஐம்பத்து நான்கு (54) மதுவரிப் பரிசோதகர் பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளமான www.doenets.lk இல் "எமது சேவைகள்" என்பதன் கீழ் "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (ஆட்சேர்ப்பு/வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள்)" (எனும் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை நிகழ்நிலைவழியாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வசதி 2026, நவெம்பர் 09 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து 2026, திசெம்பர் 07 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைக் கடைசித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எவ்வித சிக்கல்களுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

இந்தத் திறந்த போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2027, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

01. **ஆட்சேர்ப்பு முறை :**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் அதனைத் தொடர்ந்து தகுதிகாண் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் தரவரிசைப்படுத்தப்பட்டு வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

பதவியின் பொதுவான கடமை விபரம்:

மதுவரிச் சட்டம், விஷங்கள், அபின் மற்றும் அபாயகர அவுடதங்கள் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டம் என்பன தொடர்பான கடமைகளை நிறைவேற்றுதல். அலுவலக நிர்வாகம் மற்றும் மேற்பார்வைக் கடமைகளைப் புரிதல்.

02. **சம்பள அளவுத்திட்டம் :**

R.S 4- 2025 இன் கீழ் (அ. நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இற்கு அமைய) ரூ. 63,070.00 - 24 x 1,190 - ரூபா 91,630.00 மாதாந்த சம்பளம்.

03. **வயதெல்லை :**

விண்ணப்பதாரர்கள் 2026.12.07 ஆந் திகதி 21 வயதுக்கும் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (மதுவரித் திணைக்களம்சார் பதவியில் ஏற்கனவே உள்ள பட்டதாரிகளுக்கு வயது வரையறை இல்லை.)

அதற்கிணங்க 1991.12.07 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் 2005.12.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியடையவர்கள் ஆவர்.

04. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றி லிருந்து பட்டம் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்.

II. க.பொ.த. (சா./தர.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி (Credit) பெற்றிருத்தல்.

4.1 **உடல்சார் தகைமைகள் :**

I. குறைந்தபட்ச உயரம் (காலணிகள் இன்றி) 5 அடி 6 அங்குலமாக இருக்க வேண்டும். மார்பளவு உள்ளிழுக்கப்படாத நிலையில் 33 அங்குலமாக இருக்க வேண்டும்

II. மூக்குக் கண்ணாடிகள் அல்லது கண்ணாடி வில்லைகள் இன்றி, குறைந்தது 6/6 மற்றும் 6/12 என்ற அளவிலான பார்வைத் திறன் (பொருட்களை அடையாளம் காணும் திறன் உட்பட) இருத்தல் வேண்டும்

III. நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்று வதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டிருத்தல் வேண்டும்.

4.2 **ஏனைய தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

புள்ளிகள் ஒதுக்கீட்டிற்கான தலைப்புகள்	*அதிகபட்ச புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள் : முதுகலைப் பட்டம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, அடிப்படைத் தகுதிக்கு மேலான பட்டம் மற்றும் முதல் பட்டப்படிப்பில் பெற்ற தரநிலை எய்துகைகளின் அடிப்படையில் அமையும் தகைமைகள்	20
1. **மொழித் தேர்ச்சி**	10
2. **விளையாட்டுத் திறன்கள்** தேசிய மாகாண, மாவட்ட, பிராந்திய மற்றும் பாடசாலை மட்டப் போட்டிகளில் பல்வேறு விளையாட்டுகளில் பதிவு செய்யப்பட்ட சாதனைகளுக்காக	35
3. **ஏனைய திறன்கள்** **விசேட பயிற்சி** மாணவர் படையணி/ தன்னார்வலர் சேவை, தற்காப்புப் போர் முறைகள் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி **பாடத்திட்டம் சாரா செயற்பாடுகள்**	30
4. **நேர்முகப் பரீட்சை சபையின் மதிப்பீடுகள்**	05
மொத்தம்	100

எழுத்துப் போட்டிப் பரீட்சை குறித்த விவரங்கள்

பரீட்சைக்கான பாடத்திட்டம்:

வினாத்தாள்		*பாடத் திட்டம்*	
வினாத்தாளின் பெயர்	*காலம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
01. உளச்சார்பு	01 மணி	100	40%
02. பொது வினாத் தாள்	01 மணி	100	40%
01. உளச்சார்பு		இது விண்ணப்பதாரரின் நுண்ணறிவு பகுத் தறிவு மற்றும் தீர்மான மெடுக்கும் திறனைச் சோதிக்க எதிப்பார்க்கப் படுகிறது. (இதில் கணிதம்/எண் புதிர்கள் ஒத்த/ எதிர் சொற்களை எழுதுதல். சொற்றொடர்/வாக்கியம் தொடர்பான கேள்விகளும் அடங்கும்).	

வினாத்தாள்	*பாடத் திட்டம்*
02. பொது வினாத்தாள்	இலங்கை மற்றும் உலக அளவில் நடைபெறும் சமகால நிகழ்வுகள் மற்றும் சமூக நிகழ்வுகள் குறித்த தகவல்கள் மற்றும் பொது அறிவை மதிப்பிடுதல்.

தகைமை மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சை :

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள், தகுதியை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அமையும் தரவரிசை மற்றும் கிடைக்கக்கூடிய வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கொண்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இருப்பினும், இலங்கை மதுவரித் திணைக்களம் சில வெற்றிடங்களை நிரப்பாதிருப்பதற்கு தீர்மானிக்கக்கூடும்.

தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது, கல்வித் தகைமைகள் மற்றும் பிற தகைமைகளுக்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

05. **சேவை நிபந்தனைகள் :**

I. அரச கரும மொழிகள் சட்டம் மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தினால் இயற்றப்படும் அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமையச் செயற்படுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

II. 2022.12.14 ஆம் திகதியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளின் (Procedural Rules) அத்தியாயம் I, அத்தியாயம் III, அத்தியாயம் VII மற்றும் அத்தியாயம் VIII ஆகியவை இதற்கு ஏற்புடையதாகும்.

* கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களின் உடல் தகுதிகள் சரிபார்க்கப்படும்.

06. **பயிற்சிக் காலம் :**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு 3 மாத காலப் பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்களின் பயிற்சி இடைநிறுத்தப்படும். பயிற்சிக் காலத்தின் போது, பயிற்சியாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவாக ரூ. 20,000.00 வழங்கப்படும்.

07. **தகுதிகூர் காலம் :**

பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் விண்ணப்பதாரர்கள் மூன்று (3) வருட தகுதிகூர்

காலத்திற்கு உட்பட்டு, மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள் தகுதிகூர் காலத்தின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு நடத்தப்படும் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்ததும் அவர்கள் உரிய பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

7.1 குறித்த திகதியில் பணியில் சேரத் தவறும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கும், அல்லது தமக்கு ஒதுக்கப்பட்ட பதவி அல்லது பிராந்தியத்தில் பணியில் சேருவதை மறுக்கும் அல்லது தவிர்த்துக்கொள்ளும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கும் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு

08. **பரீட்சை மொழி மூலம் :**

(a) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடத்தப்படும்.

(b) விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு விருப்பமான மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

குறிப்பு :

(i) விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தை மாற்றிக்கொள்ள எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் அனுமதி இல்லை.

(iii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

09. **பரீட்சை விண்ணப்பங்கள் :**

இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மட்டுமே பூரத்தி செய்யப்பட வேண்டும். இணைய வழியாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது குறித்து விண்ணப்பதாரர் பயன்படுத்திய கைப்பேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் தாளைப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது அந்த அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்ற பின்னர் அதில் செய்யப்படும் எந்தத் திருத்தங்களும் செல்லுபடியாகாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முனைறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

10. **பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும்.** பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, இணையவழி முறையால் வழங்கப்படும் பின்வரும் கொடுப்பனவு முறைகளின் கீழ் மட்டுமே பணம் செலுத்தப்பட வேண்டும்.

(i) ஏதேனும் வங்கிக் கடன் அட்டைகள் மூலம் ;

(ii) இணையப் பரிவர்த்தனை வசதியுடன் கூடிய ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் ;

(iii) இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை/ ஃப்ளெக்ஸ் செயலி மூலம்;

III. இலங்கை வங்கியின் ரெல்லா சீட்டுக் கொடுப்பனவு செலுத்துதல் மூலம் பணம் செலுத்துதல்.

குறிப்பு:

(a) மேற்குறிப்பிட்ட முறைகளின் ஊடாகக் கொடுப்பனவைச் செலுத்துவது தொடர்பான அறிவுறுத் தல்கள், இணையதளத்தில் பரீட்சை சார்ந்த தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(b) கட்டணம் பெறப்பட்டமை குறித்து குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் வாயிலாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்த வேண்டும். நிரணயிக்கப்பட்ட தொகையை விடக் குறைவாகவோ அல்லது அதிக மாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறிப்பிடப்பட்ட கட்டணச் செலுத்தல் முறைகளைப் பயன்படுத்திப் பணம் செலுத்தும்போது ஏற்படும் தவறுகளுக்கு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப் பேற்காது.

(c) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணங் கள், எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்பட மாட்டாது.

11. அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தேதிக்குள் அல்லது அதற்கு முன்னதாக, முழுமையான விண்ணப்பங்களைச் சரியாகச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இணையவழியில் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது குறித்து இணைய அறிவித்தல் அல்லது குறுஞ்செய்தி (SMS) வாயிலாக விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப் படும்.

எவரேனும் விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை கிடைக்கப் பெறவில்லையெனில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை நடவடிக்கைப் பிரிவின் ஊடாக அது குறித்து விசாரித்து அறிந்து கொள்ளல் வேண்டும். இத்தகைய விசாரணைகளின் போது, இணைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புதல் மிகவும் பொருத்தமானதாகும். அதில் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகிய விவரங்களைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். அத்தகை விசாரணையின் போது பரீட்சைகள் திணைக்களம் கோரும் தகவல்களை உறுதிப்படுத்துவதாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைச் சரிபார்த்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படின், பரீட்சை நடைபெறும் முன்பே பரீட்சைகள் திணைக்களதைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்தின் அடிப்படையில் உரிய திருத்தங்களைச் செய்துகொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ செய்யப்படும் திருத்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒரு விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை வழங்கப் படுதல் அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அல்லது குறிப்பிட்ட பதவிக்குத் தகுதியானவர் என்பதற்கு அங்கீகாரம் அளித்ததாகக் கருதப்படக்கூடாது.

பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்று கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. விண்ணப்பதாரர்கள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டபத்திற்குள் பரீட்சை மேற்பார்வையாளருக்குத் திருப்தியளிக்கும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லு படியாகும்:

(அ) தேசிய ஆளடையாள அட்டை (NIC) ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (Passport);

(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலும், விண்ணப்பதாரர்கள் தமது அடையாளத்தைச் சரிபார்க்கும் வகையில் முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்கள் எதையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் காதுகளை மறைக்காமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து, பரீட்சை முடிந்த பின் வெளியேறும் வரை விண்ணப்பதாரர்கள் தமது முகத்தையோ அல்லது காதுகளையோ மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

13. பரீட்சை அனுமதி அட்டையில் உள்ள விண்ணப்ப தாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரர்கள், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். இந்த விதிகள் மீறப்படும் பட்சத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு விண்ணப்பதாரர்கள் ஆளாக நேரிடும்.

15. பெறுபேறுகளை வெளியிடுவதற்கான பொருத்தமான திகதியை நியமன அதிகார பீடம் அறிவித்ததும், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பரீட்சையில் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகள்/ மொத்த புள்ளிகள் அடங்கிய பெறுபேற்றுத் தாள்கள், தபால் மூலம் அனுப்பப்படும் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளம் ஊடாக பெறுபேறுகள் வெளியிடப்படும். "பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எடுக்கும் தீர்மானமே இறுதியானது."

16. சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தலின் உள்ளடக் கங்களுக்கு இடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் காணப்படுமிடத்து, சிங்கள மொழியில் உள்ள அறிவித்தலிற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எம். பி. என். ஏ. பேமரத்ன,
மதுவரி ஆணையாளர் நாயகம்,
இலங்கை மதுவரித் திணைக்களம்.

11-72

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்
விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2026/2027

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழுள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் வாயிலாக சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் NVQ 5 மட்ட விளையாட்டு டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18 - 35 (அரசாங்கசேவையில் பணியாற்றுவோரின் வயதெல்லை 45 வருடங்களினைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்) வருடங்களுக்கு இடைப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1). கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :

1.1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி அத்துடன் கணிதம்/ எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக இரு தடவைகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் 03 திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் அவன் அல்லது அவள்,

(அ). ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான கல்லூரி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 மாதப் பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(ஆ). முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(இ). பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு தள ஆலோசகராக ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்துடன் விளையாட்டுத்துறையில் விசேட ஆற்றல்களை வெளிக்காட்டியிருத்தல்.

அல்லது

(ஈ). யாதேனும் விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் யாதேனும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல்.

அல்லது

(எ). விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல். அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

1.2 மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் பொருந்தாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2). விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை :-

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் 8"×13½" அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்திசெய்து 2026.12.01 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.2. விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி - 2026/2027 தொடர்பான விண்ணப்பப் படிவம்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3. அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின் / நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3). தேர்ந்தெடுக்கும் முறை :

இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற் தகைமைகாண் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

4). பாடநெறி தொடர்பான விபரங்கள் :

4.1. பாடத்திட்டமானது கீழ் குறிப்பிடப்பட்டவாறு 05 பிரிவுகளை உள்ளடக்கியதாகும் :-

(அ). பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்

உடற்றகைமைகள் மற்றும் இயலுமைகள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்றுவித்தல் முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச்சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழிமூலப் பரீட்சை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

(ஆ). ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு.

(இ). சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ). சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்களின் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்து கொள்ளும் ஓர் விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம்.

(உ). விளையாட்டு உடற்கூற்றியல், விளையாட்டுச் சமூகவியல், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளி விபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2. பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3. இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ரூபா 60,000.00 பணத்தினை, காசுச் சிட்டையில் கணக்குரிமையாளரின் பெயராக "செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு" அத்துடன் வைப்பின் தேவைப்பாடாக "NISS DIP 26/27" எனக் குறிப்பிட்டு கணக்கு இலக்கம் 7040742 இனை உடைய இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் பாடநெறிக்கான கட்டணமாக பாடநெறியானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தி அக் காசுச் சிட்டையின் புகைப்படம் ஒன்றினை diploma@niss.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாதவர்களின் பணம் தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் பொறுப்பு கூற மாட்டாது.

பாடநெறிக்கான கட்டணத்தினை செலுத்தி நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் பெறுநராக "செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங் கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4. பாடநெறியின் பொருட்டு தகைமைகளைப் பெற்றுக் கொண்ட அபேட்சகர்களுக்கு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினது விடுதி வசதிகளை பெற்றுக்கொள்ள முடிவதுடன் விடுதிக்கான கட்டணமாக (பாடநெறி நடாத்தப்படும் ஒரு வருட காலம்) ரூபா 18,000.00 தொகையானது அறவிடப்படும். பாடநெறி தொடர்பாக பதிவானது மேற்கொள்ளப்படும் தினத்தில் மேற்படி பணத்தினை செலுத்துதல் வேண்டும்.

4.5. பாடநெறியினைப் பயிலுவதற்காகத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களினையும் பிரமாணங்களினையும் கடைப்பிடிப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

4.6. பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர்களின் பொருட்டு "விளையாட்டு டிப்ளோமா" சான்றிதழ் வழங்கி வைக்கப்படுவதுடன் NVQ 5 வாய்மொழி மூலப் பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர் NVQ 5 சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுவதற்கான சந்தர்ப்பமானது கிடைக்கப்பெறும்.

5). ஏனைய நிபந்தனைகள் : -

5.1. பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ் அமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2. தற்போது கொண்டுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5.3. இங்கு தழுவப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின், அவை தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.
இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 07,

2026.10.28

மாதிரி விண்ணப்பப்படிவம்
விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி 2026/2027
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம்

01. i. முழுப்பெயர் (திரு./ திருமதி/ செல்வி): .....

ii. முதலெழுத்துக்களுடன் பெயர் : .....

iii. முழுப்பெயர் (ஆங்கில மொழியின் பெரிய எழுத்துக்களில்) : | | | | | | | | | | | | |

iv. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:- | | | | | | | | | | |

02. முகவரி

i. சொந்த : .....

ii. அலுவலக : .....

ili. வட்ஸ்அப் இலக்கம்: .....

iv. மின்னஞ்சல் முகவரி (email address) : .....

v. தொலைபேசி இலக்கம் (சொந்த): ..... தொலைபேசி இலக்கம் (அலுவலக):- .....

03. i.. பிறந்த திகதி :- ஆண்டு ..... , மாதம் ....., திகதி .....

ii. 2026.12.01 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் ..... , மாதங்கள் ..... , நாட்கள் .....

04. i. இலங்கைப் பிரசையா? இல்லையா? என்ற விபரம் .....

ii. இலங்கைப் பிரசையாயின் பதிவின் மூலமா? அல்லது பரம்பரையினாலா? என்ற விபரம் .....

05. i. ஆண் / பெண் பால் நிலைமை : .....

ii. திருமணமானவர் / திருமணமாகாதவர் : .....

06. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா ? என்ற விபரம் : .....

i. பதவி : .....

ii. சேவைக் காலம் : .....

iii. சேவை நிலையம் : .....

07. 1. கல்வித் தகைமைகள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை

வருடம் : ..... பரீட்சைச் சுட்டெண் .....
.....

பாடம்	*தரம்*	*பாடம்*	*தரம்*

2.2. விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி - 2026/2027 தொடர்பான விண்ணப்பப் படிவம்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3. அரசாங்க சேவை, மாகாண அரசாங்க சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின் / நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3). தேர்ந்தெடுக்கும் முறை :

இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற் தகைமைகாண் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

4). பாடநெறி தொடர்பான விபரங்கள் :

4.1. பாடத்திட்டமானது கீழ் குறிப்பிடப்பட்டவாறு 05 பிரிவுகளை உள்ளடக்கியதாகும் -

(அ). பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்

உடற்றகைமைகள் மற்றும் இயலுமைகள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்றுவித்தல் முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச்சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழிமூலப் பரீட்சை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

(ஆ). ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு.

(இ). சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ). சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்களின் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்து கொள்ளும் ஓர் விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம்.

(உ). விளையாட்டு உடற்கூற்றியல், விளையாட்டுச் சமூகவியல், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2. பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3. இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் ரூபா 60,000.00 பணத்தினை, காசுச் சிட்டையில் கணக்குரிமையாளரின் பெயராக "செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு" அத்துடன் வைப்பின் தேவைப்பாடாக "NISS DIP 26/27" எனக் குறிப்பிட்டு கணக்கு இலக்கம் 7040742 இனை உடைய இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் பாடநெறிக்கான கட்டணமாக பாடநெறியானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தி அக் காசுச் சிட்டையின் புகைப்படம் ஒன்றினை diploma@niss.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாதவர்களின் பணம் தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் பொறுப்பு கூற மாட்டாது.

பாடநெறிக்கான கட்டணத்தினை செலுத்தி நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் பெறுநராக "செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங் கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4. பாடநெறியினைப் பயிலுவதற்காகத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களினையும் பிரமாணங்களினையும் கடைப்பிடிப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

திகதி : ....
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,

இவ் ..... இல் ..... ஆகக் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி .....
.....அவர்களது விண்ணப்பப்படிவத்தைச் சிபாரிசு செய்து சமர்ப்பிப்பதுடன், இவ் விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவனை / அவளை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்
பதவி முத்திரை

திகதி : ..... பெயர் : .....
பதவி : .....

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக வெற்றிடங்களை பிரசுரித்தல் - 2025/2026

Publishing of Vacancies for Recruitment of the officers to the Grade III of the Sri Lanka Principals Service 2025/2026

இலக்கம் 2,463 மற்றும் 2025.11.14 ஆம் திகதியுடைய அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025" வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு அமைய 2026.06.07 ஆம் திகதி நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சை மற்றும் எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள நேர்முகப்பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், பின்வரும் மாவட்டங்களிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் (தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள்) இலங்கை அதிபர் சேவையின் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு 2026.10.05 ஆம் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

தொடர் இல.	மாவட்டம்	இலங்கை அதிபர் சேவையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை	
		சிங்கள மொழி மூலம்	தமிழ் மொழி மூலம்
01	கொழும்பு	55	2
02	கம்பஹா	234	16
03	களுத்துறை	95	56
04	கண்டி	2	106
05	மாத்தளை	126	52
06	நுவரெலியா	65	136
07	காலி	213	17
08	மாத்தறை	105	17
09	ஹம்பாந்தோட்டை	193	6
10	யாழ்ப்பாணம்	இல்லை	97
11	கிளிநொச்சி	இல்லை	33
12	மன்னார்	1	60
13	வவுனியா	7	52
14	முல்லைத்தீவு	7	49
15	மட்டக்களப்பு	இல்லை	335
16	அம்பாறை	61	55
17	குருநாகல்	351	54
18	திருகோணமலை	68	174
19	புத்தளம்	258	103
20	அனுராதபுரம்	184	47
21	பொலன்னறுவை	156	24
22	பதுளை	90	68
23	மொணராகலை	214	11
24	இரத்தினபுரி	343	73
25	கேகாலை	211	74

அம்மாவட்டங்களில் ஒவ்வொரு மொழிமூலத்தின் கீழும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கானோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், தகுதியுடையோரின் பெயர் விபரம், நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் என்பன தொடர்பாக எதிர்வரும் நாட்களில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

தகுதியுடையோரின் பெயர் விபரத்தில் தங்களது பெயர் குறிப்பிடப்பட்டிருப்பின், தாங்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக தங்களுக்குக் கடிதம் மூலமும் அறியத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
எவ்வாறு இருப்பினும், உரிய கடிதம் கிடைக்கப்பெறாவிடினும் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் குறித்த திகதியில் தங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் வர்த்தமானி அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் ஏற்படுமாயின், சிங்கள மொழிமூலமான அறிவித்தலே சரியானது எனக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

11 - 102

இலங்கை புகையிரத திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழிநுட்ப தொகுதி -02சேவை பிரிவு தொடர்பிலான ஆட்சேர்ப்புத் திட்டம் – (MT -02) கீழ் புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவிகளில் III ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2017.06.15 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக் களத்தில் முகாமைத்துவ உதவி தொழிநுட்பத் தொகுதி 2 இன் சேவை பிரிவிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய (MT -02) மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங் களுக்கமைய இலங்கை புகையிரத தொழிநுட்ப முகாமைத் துவ உதவியாளர்(இயந்திர) பதவிகளில் 111 ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பில் பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பில் தகைமைகளை கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2026.12.07 ஆகும்.

2) இந்த திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு -02 சேவை பிரிவில் (MT -02), புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவியில் காணப்படுகின்ற 80 வெற்றிடங்களுக்காக ஆட் சேர்ப்பு செய்யப்படுகின்றது.

குறிப்பு 1

புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவிக்கு விண்ணப்பதாரியினால் கற்கப்பட்ட பாடநெறிக்கு ஏற்புடையவாறு கீழ்வரும் துறைகள் தொடர்பில் ஆட்சேப்பு செய்யப்படும்

- சாதாரண பொருத்துநர்
- டீசல் பொருத்துநர்
- இயந்திரவியல் பொருத்துநர்
- மெசின்காரர்
- உருக்கிகாய்ச்சுபவர்
- கேஸ் வெட்டுநர்
- தகடு வைப்பவர்
- பொய்லேறு செய்பவர்/ பொய்லேறு பொருத்துநர்
- மோட்டார் தொழிநுட்பவியலாளர்

3) பயிற்சி காலப்பகுதிக்கு இணைத்துக் கொள்வதற்கான தகைமைகள்

3.1 கல்விசார் தகைமைகள்:

a. சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் ஏதேனும் வேறு இரு பாடங்களில் திறமை சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்கள் க.பொ.த.(சா/தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

b. கல்வி பொது தராதர சான்றிதழ் .(உயர்தர) பரீட்சையில் பௌதீகவியல்/தொழிநுட்பவியல் பாட துறையின் கீழ் அனைத்து பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சையை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்

குறிப்பு 2

2017.06.15 ஆந் திகதிக்கு இலங்கை ஜேர்மன் புகையிரத தொழிநுட்பப்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பாடநெறிகளுக்காக உள்ளெடுக்கப்பட்டுள்ள பயிலுநர்கள் தொடர்பில் மாத்திரம் ஏற்புடைய பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்படுகின்ற பயிற்சி சான்றிதழ் பெற்றிருந்தால் மேற்கூறிய (3) கல்விசார் தகைமைகளை கருத்திற்கொள்ளாது விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

3.2 தொழிற்சார் தகைமைகள்

ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற தரம்	தொழிற்சார் தகைமைகள்	பயிற்சிக் காலம்
புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர் (இயந்திர) பயிற்சி காலம்	இலங்கை ஜேர்மன் புகையிரத தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்தில் பதவிக்கு ஏற்புடைய துறையொன்றில் (குறிப்பு 1 இல் உள்ளடக்கப்பட்ட துறைகளுக்கு ஏற்புடைய) இரண்டரை (2 ½) வருடங்களுக்கு குறையாத முழுநேர தொழிநுட்ப பாடநெறியொன்றினை கற்று சான்றிதழினை பெற்றிருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் துறைக்கு ஏற்புடைய (குறிப்பு 1 இல் உள்ளடக்கப்பட்ட துறைகளுக்கு ஏற்புடைய)) இரண்டரை (2 ½) வருடங்களுக்கு குறையாத பாடநெறியொன்றினை கற்று சான்றிதழினை பெற்றிருத்தல்	01 வருடம்

குறிப்பு 3

ஆட்சேர்ப்பினை மேற்கொள்கையில் இலங்கை ஜேர்மன் புகையிரத பயிற்சி நிலையத்தின் பயிலுநர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அவர்களை இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் எஞ்சிய வெற்றிடங்கள் தொடர்பில் ஏனைய நிறுவனங்களில் தொழிநுட்ப பாடநெறிகளை கற்று சான்றிதழ்களை பெற்றுள்ளவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

4.3 அனுபவம்-

பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றிருக்கும் அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

4.4 உடற்சார் தகைமைகள்

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும் பதவியில் கடமையினை மேற் கொள்ளவதற்கு போதியளவான உடல் மற்றும் உளசார் பொருத்தப்பாட்டினைக் கொண்டிருப்பதோடு புகையிரத நிபந்தனைக் கோவையில் காட்டப்பட்டுள்ள கண் பார்வை அளவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.5 வேறு தகைமைகள்

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்;

ii. விண்ணப்பதாரி சிறந்த நன்னடைத்தையை கொண்டிருத்தல் வேண்டும்;

iii. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பக் கோரல் அறிவித்தலில்/ வர்த்தமானியில் /இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பக் கோரலின் இறுதித் திகதிக்கு அனைத்து வகையிலும் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.6 வயதெல்லை

விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி தினத்திற்கு 18 வயதிற்கு குறையாத வகையிலும் 45 வயதினை விஞ்சாத வகையிலும் இருத்தல் வேண்டும்

5). ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறைமை

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் எழுத்து மூல பரீட்சை மற்றும் தகைமைகளை மதிப்பிடும் மதிப்பீட்டு நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்து மூல பரீட்சை மற்றும் தகைமைகளை மதிப்பிடும் மதிப்பீட்டு நேர்முக பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்த புள்ளிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் திறமை முறைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு முதலில் ஒரு வருட பயிற்சி கால எல்லைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். சமான புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையை விஞ்சி காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது தொடர்பிலான தீர்மானம் நடைமுறை விதிக் கோவையின் 92 ஆவது பந்தியின் பிரகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும். பயிற்சி இறுதியில் எழுத்து மற்றும் பிரயோக பரீட்சைக்கு முன்வைக்கப்பட்டு தேர்ச்சிப் பெற்றவர்கள் புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவியில் 111 அம் தரத்திற்கு நியமிக்கப்படுவர். முதல் தடவை பயிற்சி நிறைவு பரீட்சையில் தேர்ச்சிடையாதவர்களுக்கு மீண்டும் பயிற்சி நிறைவு பரீட்சை தொடர்பில் தோற்றுவதற்கு 02 சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதோடு அதில் தேர்ச்சிடையாதவர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

6). சம்பள அளவுத்திட்டம்

பயிற்சி கால எல்லையின் பின் 111 ஆம் தரம் தொடர்பில் இப் பதவி தொடர்பில் பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இல் உப அட்டவணை 01 இற்கமைய ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் (MT-02-2025)ரூ.50,630-10x630-11x670-10x1010-10x1190-86,300 ஆகும். தங்களுக்கு அச்சுற்றறிகையின் ஏற்பாடுகளுக்கமைய அதன் உப அட்டவணை 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறே சம்பளம் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தருக்கு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் செலுத்தப்படும் வேறு கொடுப்பனவுகளும் தங்களுக்கு உரித்தாகும்.

பயிற்சிக் கால பகுதிக்காக
மாதாந்த கொடுப்பனவு – 2026.01.01 -2026.12.31 ஆந் திகதி வரை மாதாந்த கொடுப்பனவு ரூ.41,209/- ஆகும். 2027.01.01 தொடக்கம் 42,780/- ஆகும்)

7) . பரீட்சைக் கட்டணம்

இப் பரீட்சை புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப்படுகின்ற நிறுவமொன்றின் மூலம் நடாத்தப்படும். பரீட்சைக் கட்டணம் ரூ.1200/- ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையின் கணக்கு இல 176-1001-090-27313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். அப் பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

1. பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது

2. பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

08. விண்ணப்பிக்கும் முறை

(அ) விண்ணப்பமானது இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய காணப்பட வேண்டும். அது 29.5 செ.மீ X 21 அளவிலான A4 கடதாசியின் இரு புறங்களையும் பாவனைக்கு உட்படுத்தி தயாரிக்கப்பட்டு தமது கையெழுத்திலேயே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 2.11 வரையான தலைப்புக்கள் முதலாவது ஏனையவை அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும். இதற்காக கணினியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப் படலாம். நிரப்பப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரியினால் பரீசீலனை செய்யப்பட வேண்டும். மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் ஆகையால் விண்ணப்பத்தினை முன்வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா எனவும் மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரீசிலித்து பார்க்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(இ) விண்ணப்பத்தினை புகையிரத பொதுமுகாமையாளர் அல்லது புகையிரத திணைக்களத்தின்ஏனையஉத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயரிற்கு அனுப்பிவைக்க கூடாது. விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கை புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி தொழிநுட்ப தொகுதி -02 சேவை பிரிவு தொடர்பிலான புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) 111 ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026 " என குறிப்பிட வேண்டும்

(ஈ) விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 07.12.2026 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.. அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம்,
த.பெ.355
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தாம் சேவை புரிகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவரின் ஊடாக முன்வைக்க வேண்டும்.

09. . பரீட்சைக்கு பிரவேசித்தல்

(அ) இவ் எழுத்து மூல பரீட்சையானது புகையிரத பொதுமுகமையாளரினால் நியமிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே அந்நிறுவனத்தினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் வழங்கப்படும். தமது நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரி யொருவர் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய அனுமதி நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு அப் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளே அதன் மண்டலாதிபதியிடம் கையளிக்க வேண்டும். விண்ணப்பதாரி தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தினையே பரீட்சை மண்டபத்திலும் குறிப்பிட வேண்டியதுடன் ஏதேனும் காரணத்தினால் வேறேதும் இலக்கத்தினை குறிப்பிட்டிருந்தால் அப் பரீட்சார்த்தியின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும், அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சையை நடாத்தும் நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள்

கீழ்படிய வேண்டும். அச் சட்டங்களை மீறினால் ஏற்புடைய நிறுவனத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு கீழ்படிய அவருக்கு நேரிடும்.

(இ) கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப் பமானது அரசாங்க பாடசாலையொன்றின் தலைவரொருவர்/ஓய்வு பெற்ற உத்தியோகத்த ரொருவர்/ பிரிவின் கிராம உத்தியோகத்தர்/ சமாதான நீதவானொருவர்/சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாள ரொருவர்/ சட்டத்தரணி யொருவர்/பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர்/ முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்த ரொருவர்/அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர பதவியினையுடைய பதவி நிலை உத்தியோகத்தரொருவர்/பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியொருவர்/ தலைமை புத்த பிக்கொருவர்/ ஏனைய மத தலங்களுக்கு ஏற்புடைய மத குருமார்களில் கருத்திற்கொள்ளக்கூடிய பதவியினை வகிக்கும் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

குறிப்பு 3 - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை பிரவேச அனுமதி பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையினை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதிக்கு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளெடுக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியினை இனங்கண்டுகொள்ளக்கூடிய விகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

11. பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்

1. இப் பரீட்சைக்கு ஏற்புடைய விதிகளுக்கமைய எவரேனும் விண்ணப்பதாரியொருவர் அதற்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என தெரிய வருமிடத்து பரீட்சைக்கு முன்னதாக அல்லது பரீட்சை நடைபெறுகையில் அல்லது அதன் பின்னர் அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அவரது எதிர்பார்க்கை இரத்து செய்யப்படலாம்.

11. விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பின்னொரு காலத்தில் தவறானவை என்பது தெரியவருமிடத்து , அவர் தெரிந்தே ஏதேனுமொரு விடயத்தை மறைத்தது தெரியவருமிடத்து அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் இதனகத்தும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இப் பரீட்சையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நியமனம் இரத்து செய்யப்பட அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கோ கீழ்படிய வேண்டும்.

12) பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழி மூலம்

இப் பரீட்சை புகையிரத பொதுமுகாமையாளரினால் நியமிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

12.1 எழுத்து பரீட்சை மூலம்

1. பரீட்சை சிங்களம், மற்றும் தமிழ் எனும் மொழிகளின் மூலம் நடாத்தப்படும் .

குறிப்பு a. விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுகின்ற அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளிக்க வேண்டும்

b. தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்கு தோற்றுகின்ற பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது

12.2 எழுத்து பரீட்சையின் பெறுபேறுகள்

I. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறு பேறுகளை வழங்குதல் தொடர்பில் பரீட்சையை நடாத்தும் நிருவனத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர்.

12.3 எழுத்து பரீட்சை பற்றிய விபரங்கள்

1. பயிற்சிக் கால பகுதிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்துமூல பரீட்சை.

பாடங்கள்	காலம்	அதிகூடிய புள்ளி	சித்தியடையும் புள்ளி
பொது அறிவு நுண்ணறிவுப் பரீட்சை	01 மணித்தியாலம்	100	40%
தொழிநுட்ப பாடம்	02 மணித்தியாலங்கள்	100	40%

12.4 எழுத்து பரீட்சைக்கான பாட விதந்துரை

- பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை –
  விண்ணப்பதாரி வாழ்கின்ற சூழல் மற்றும் தொழில் புரியும் சூழல் உள்ளடங்கலாக இலங்கையின் சமூக,அரசியல்,கலாச்சார மற்றும் பொருளாதார அறிவு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமான புதிய விடயங்களை போலவே புராதன விடயங்களும் விஞ்ஞான,பௌதீக மற்றும் விண்ணப்பதாரியின் வாத திறமை மற்றும் விபரிப்பு ஆளுமையினையும் சரியான சந்தர்ப்ப கற்றலுக்கமைய அனுமானங்களை மேற்கொள்வதற்கான திறமை, பொது அறிவு மற்றும் சூழலை தழுவிய கட்டமைக்கப்பட்ட மாதிரியிலான எழுத்து மூல பரீட்சையாகும்.

- - தொழிநுட்ப பாடம்

  பதவிக்கு ஏற்புடைய வகையில் அறிந்து வைத்திருக்க வேண்டிய அடிப்படை தொழிநுட்பக் கோட்பாட்டு அறிவினை மதிப்பிட்டு பார்க்கும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமாகும்.

13. தகைமையை மதிப்பிடுவதற்கான நேர்முக பரீட்சை

எழுத்து மூல பரீட்சையில் தேர்ச்சிப் பெறும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை முறைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்குக்கு சமமான விண்ணப்பதாரிகள் எண்ணிக்கையை தகைமைகள் மதிப்பீட்டும் நேர்முக பரீட்சைக்கு ஈடுபடுத்தி எழுத்துமூல பரீட்சையில் மற்றும் நேர்முக பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் திறமை முறைக்கமைய விண்ணப்பங்களை கோரும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமான எண்ணிக்கைக்கு ஆட்சேப்பு செய்யப்படும்.(குறிப்பு 1 இற்கமைய தகைமைகள் மதிப்பீட்டும் நேர்முக பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.)

14. பயிற்சி காலத்தின் பின்னர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை

14.1 பயிற்சி காலத்தின் பின்னர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான எழுத்து மூல பரீட்சையின் பாடங்கள்

பாடங்கள்	காலம்	மொத்தப் புள்ளி	சித்தியடையும் புள்ளி
தொழிநுட்ப பாடம்	2 மணித்தியாலங்கள்	100	40%

பாட விதப்புரை

தொழிநுட்பவியல் பாடம் –

பதவிக்கு ஏற்ப அறிந்துக் கொள்ள வேண்டிய அடிப்படை தொழிநுட்ப அறிவினை மதிப்பீடு செய்யக்கூடிய வகையிலான வினாக்களை கொண்டமைந்துள்ளது.

14.2 பயிற்சி காலத்தின் பின்னர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான பிரயோக பரீட்சை

பாடங்கள்	மொத்தப் புள்ளி	சித்தியடையும் புள்ளி
தொழிநுட்பவியல் பாடம்	100	40%

பாட விதப்புரை

தொழிநுட்பவியல் பாடம் –தெரிந்தெடுக்கப்பட்ட பாடம் தொடர்பிலான தேர்ச்சியினை மதிப்பிடுவதற்காக ஏற்புடைய தொழிநுட்பவியல் பாடம் தொடர்பிலான கோட்பாட்டு அறிவினை பிரயோக ரீதியில் சரியாக பயன்படுத்திக் கொள்கிறாரா என்பதை மதிப்பிடுவதற்காக பிரயோக பரீட்சை நடாத்தப்படும்.

15. சேவை நிபந்தனைகள்

இப்பதவி நிரந்தரமானது. .ஓய்வூதிய உரித்துடையது

15.1 சேவை உடன்படிக்கை தொடர்பிலான விளக்கம் பயிற்சி காலத்திற்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 111 ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் 111 ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருட காலத்திற்கு கட்டாயமாக புகையிரத திணைக்களத்தில் சேவை புரிய வேண்டும். அவ்வாறு 10 வருட சேவை காலத்திற்கு முன்னர் நீங்காதிருப்பதாகவும் அதற்கு முன்னர் சேவையிலிருந்து நீங்கினால் புகையிரத பொதுமுகாமையாளரினால் விதப்புரைக்கப்படுகின்ற தொகையினை திணைக்களத்திற்கு செலுத்துவதற்கும் இணங்குகின்றமையையும் அரச ஊழியர் ஒருவரை பிணையாக முன்வைப்பதோடு பொறுப்பொன்றிற்கு இணைய வேண்டும்..

111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 ஆண்டுகள் கழியும் முன்னர் முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் தேர்ச்சிப் பெற வேண்டும்.

15.2 அரசகரும மொழிகள்

அரசகரும மொழி அல்லாத மொழி மூலத்தின் ஊடாக சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழியில் தேர்ச்சியினை தகுதிகூர்காண் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஏனைய அரச கருமமொழி - பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேரான சுற்றறிக்கைகளின் படி ஏற்புடைய மட்டத்தில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரச சேவையின் நியமனங்கள் நிர்வகிக்கப்படுகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை புகையிரத திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழிநுட்ப தொகுதி 02 சேவை பிரிவிற்க்கான ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் , அத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இன்னகத்து செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கும் , தாபன விதிக்கோவையில் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் திணைக்கள கட்டளைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்படிய வேண்டி ஏற்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏற்புடைய மருத்துவ பரீட்சையில் தேர்ச்சியடைவதற்கு மேலதிகமாக புகையிரத திணைக்கள அறிவுறுத்தற் கோவைக்கமைய பதவிக்கு ஏற்புடைய தேர்ச்சி பெறவேண்டிய விசேட கண்பார்வை பரிசோதனையிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

16. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ் அறிவித்தலில் யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற அல்லது இணங்காத தன்மை காணப்படின், அச் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

17) எவ்வித வெற்றிட எண்ணிக்கையை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பப்படாதிருக்கவும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் காணப்படுமிடத்து அது தொடர்பிலான இறுதி தீர்மானத்தினை மேற்கொள்வதற்கும் புகையிரத பொதுமுகாமையாளரிற்கு அதிகாரம் காணப்படுகிறது.

ரவிந்திர பத்மபிரிய
புகையிரதப் பொதுமுகாமையாளர்

புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவிகளில் பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மதிப்பீட்டு நேர்முக பரீட்சை– 2026

பின்னிணைப்பு 1

தொடரிலக்கம்	புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகள்	கவனத்திற் கொள்ளப்படுகின்ற உப துறைகள்		வழங்கப்படுகின்ற புள்ளிகளின் எண்ணிக்கை	அதிக்கூடிய புள்ளி
01	மேலதிக கல்விசார் தகைமைகள்	க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழி தொடர்பில்	சாதாரண சித்திதொடர்பில் 02 புள்ளிகளும் திறமை சித்தி அல்லது அதனை விட உயர்ந்த சித்தியினை பெற்றிருப்பின் 05 புள்ளிகள் வீதமுமாக புள்ளிகள் வழங்கப்படலாம்	5	20
		ஆங்கில பாடம் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்	அங்கீகரிக்கப்பட்ட நிறுவமொன்றினால் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில் (06 மாதத்திற்கு	5	

தொடரிலக்கம்	புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகள்	கவனத்திற் கொள்ளப்படுகின்ற உப துறைகள்		வழங்கப்படுகின்ற புள்ளிகளின் எண்ணிக்கை	அதிக்கூடிய புள்ளி
		கணனியறிவு தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்	குறைவான சான்றிதழுக்காக 02 புள்ளிகளும் மற்றும் 06 மாதத்தினை விட விஞ்சிய டிப்ளோமா பாடநெறி தொடர்பில் 05 புள்ளிகள் வீதமும் உச் சஅளவாக 05 புள்ளிகளுக்மைய புள்ளிகள் வழங்கப்படலாம்	5	
		வேறொரு மொழி தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ டிப்ளோமா பாடநெறி தொடர்பில்		4	
02.		தொழிலுக்கு ஏற்புடைய துறையில் பெற்றுள்ள நிபுணத்துவம்' பற்றி கருத்திற்கொள்ளப்படும். (அடிப்படை தொழிற்சார் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது)			
	மேலதிக கல்விசார் தகைமைகள்	துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 06 மாத பாடநெறி தொடர்பில்		10	30
		துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 01 வருட டிப்ளோமா பாடநெறி தொடர்பில்		20	
		துறை சார்ந்த அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 01 வருடத்தினை விஞ்சிய பாடநெறி தொடர்பில்		30	
03.	தொழில்சார் பெற்றுள்ள அனுபவங்கள்	துறை சார்ந்து பெறப்பட்டுள்ள அனுபவம் கருத்திற் கொள்ளப்படும் புள்ளிகள்			
		03 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சியதெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 15 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக		30	30

தொடரிலக்கம்	புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகள்	கவனத்திற் கொள்ளப்படுகின்ற உப துறைகள்		வழங்கப்படுகின்ற புள்ளிகளின் எண்ணிக்கை	அதிக்கூடிய புள்ளி
		02 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 03 இனை விடவும் குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 10 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக		**20**	
		01 வருட சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 02 இனை விட குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக		10	
		06 மாத சேவை அனுபவம் அல்லது அதனை விஞ்சிய அல்லது 01 இனை விட குறைந்ததெனின் ஒரு சேவை சான்றிதழுக்கு 2.5 புள்ளிகள் வீதம் 02 சேவை சான்றிதழ்களுக்காக		5	
04.	விசேட / வெளிவாரி திறமைகள்	விளையாட்டு/ மாணவ இராணுவ வீரர் போன்றவை தொடர்பில் பெற்றுள்ள 03 சான்றிதழ்களுக்காக 03 புள்ளிகள் வீதம் (அதிகூடியதாக 03 சான்றிதழ்களுக்கு)		9	15
		அழகியல் திறமை தொடர்பில் பெற்றுள்ள அங்கீகரிக்கப்படக் கூடிய சான்றிதழொன்றிற்காக 1 புள்ளி வீதம் அதிகூடியதாக 02 சான்றிதழ்களுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்.		2	

தொடரிலக்கம்	புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான துறைகள்	கவனத்திற் கொள்ளப்படுகின்ற உப துறைகள்		வழங்கப்படுகின்ற புள்ளிகளின் எண்ணிக்கை	அதிக்கூடிய புள்ளி
		சமூக சேவை நடவடிக்கைகள் தொடர்பில் பெற்றுள்ள சான்றிதழ்கள்/ அறநெறி போட்டி பரீட்சை சான்றிதழ்கள் ஒன்றிற்காக 1 புள்ளிகள் வீதம் அதிகூடியவாறு 92 சான்றிதழ்கள் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படும்		2	
		மேற்கூறிய புள்ளிகளை வழங்குவதற்காக முன்வைக்கப்படாத வேறு வெளிவாரி திறமைகள் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்படக்கூடிய		2	
		சான்றிதழொன்றிற்காக 1 புள்ளிகள் வீதம் அதிகூடியவாறு 92 சான்றிதழ்களுக்காக			
5	நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் எண்ணக்கருக்கள் மற்றும் ஆளுமை	தலைமைத்துவம்		2	
		ஆளுமை		2	
		தொலைத்தொடர்பு		1	
	மொத்தம்				100

பின்னிணைப்பு II

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக பாவனைக்கு மாத்திரம்

இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் முகாமைத்துவ உதவி தொழிநுட்ப தொகுதி - 02சேவை பிரிவு தொடர்பிலான ஆட்சேர்ப்புத் திட்டம் – (MT -02) கீழ் புகையிரத தொழிநுட்ப முகாமைத்துவ உதவியாளர்(இயந்திர) பதவிகளில் III ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2026

1.0 மொழி மூலம்
பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பித்த மொழி மூலம் [ ]
சிங்களம் -2 தமிழ் -3

(குறித்த எண்ணை கூட்டினுள் எழுதுக)
விண்ணப்பமானது பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மொழி மூலத்திலேயே நிரப்பப்பட வேண்டும்.)

2.0 தனிப்பட்ட தகவல்கள்

2.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.....
(உதா- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANE)

2.2 இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னருடனான பெயர் : .....
.....
(உதா- GUNAWARDHANE, H.M.S.K)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : .....

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (பரீட்சை அனுமதிச்சீட்டுக்கள் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) : .....

2.5 பெண்பால்/ஆண்பால் - ஆண்பால் - 0 பெண்பால் - 1 [ ] ஏற்புடைய இலக்கத்தனை கூட்டினுள் எழுது

2.6 தேசிய ஆடையாள அட்டை இல.: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2.7 தொலைப்பேசி இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2.8 திருமணமானவர்/திருமணமாகாதவர் : திருமணமானவர் 1 - திருமணமாகாதவர்- 2 [ ]
ஏற்புடைய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக

2.9 இனம் (சிங்களம் -1, தமிழ்-2, இந்தியன் தமிழ்-3, முஸ்லிம்-4, பிற -5)

2.10 பிறந்தத் திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

2.11 விண்ணப்பகோரலின்போது வயது

வருடங்கள் [ ][ ][ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

3.0 கல்வி மற்றும் தொழிற்சார் தகைமைகள்

3.1 கல்வி பொதுதராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையின் பெறபேறுகளின் விபரம்

3.1.1 பரீட்சை சுட்டெண் : .....

3.1.2 பரீட்சை க்கு தோற்றிய வருடம் : .....

பாடம்	சித்திகள்

3.2 கல்வி பொதுதராதர சான்றிதழ் (உயர் தர) பரீட்சையின் பெறபேறுகளின் விபரம்

3.2.1 பரீட்சை சுட்டெண் : .....

3.2.2 பரீட்சை க்கு தோற்றிய வருடம் : .....

பாடம்	சித்திகள்

3.3. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கற்ற பாடநெறியின் பெயர் : .....

பாடநெறியின் காலம் - ஆண்டு

..... திகதி தொடக்கம் ..... திகதி வரை

4.0 பணம் செலுத்தப்பட்ட காசு வைப்புச் சீட்டினை கழறாத வண்ணம் ஒட்டவும் :

5.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சட்டதிட்டங்களுக்கமைய திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்றகு நான்தகைமையானவன்என்பதையும்இங்குகுறிப்பிடப்பட்டுள்ளதகவல்கள்நான்அறிந்தவகையிலும் விசுவசிக்கின்ற வகையிலும் உண்மையானவை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். பரீட்சை விதிமுறைகளுக்கு ஒழுகி செயற்படவும் இப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய நான் தகைமையற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நிகழ்கையில் அல்லது அதன் பிறகு எனது பரீட்சை எதிர்பார்க்கையினை இரத்து செய்யப்படுவதற்கும் நான் இணங்குகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் பரீட்சையினை நிகழ்த்தும் நிறுவனத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டவன் என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

திகதி : ....
விண்ணப்பதாரியின் கையொப்பம்

6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தை முன்வைத்துள்ள ..... (முழுப்பெயர்) அவர்களை தனிப்பட்ட ரீதியில் நான் அறிவேன் என்றும் குறித்த பரீட்சைக்குரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டிருப்பதையும் அவர் .....ஆம் திகதி என் முன்னால் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : .....
பதவி : .....
முகவரி : .....
(உத்தியோகபூர்வ இலச்சினை)

7.0 திணைக்கள தலைவரின் பரிந்துரை(அரசாங்க .உள்ளூராட்சி/அரசாங்க கூட்டுத் தாபன சேவைகளில் கடமை புரியும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... அவர்கள் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/நிறுவனத்தில் .....ஆக சேவை புரிவதோடு அவரின் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இப் பதவிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

திகதி : .....

.....
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .....
பதவிப்பெயர் : .....
திகதி : .....
(உத்தியோகபூர்வ இலச்சினை)

11 - 103